# மனிதமும், புனிதமும்

திருத்தந்தை பிரான்சிஸின்
அரிய சிந்தனைகளுடன்
திருவருகைக்காலம்
கிறிஸ்துமஸ்
புத்தாண்டு
திருக்காட்சி விழா ...
சிறப்புச் செபங்களும்
நடப்புச் செயல்களும்..!

ஜெரி

# முகப்புரை :

ஆண்டுதோறும் கொண்டாடப்படும் திருவருகைக் காலம் மற்றும் கிறிஸ்து பிறப்புக்காலத்தில் **"ஆண்டவர் அண்மையில், நம் அருகில், நம்மோடு உள்ளார்"** என்பதால் நாம் மகிழ்ந்திருக்க வேண்டுமென திரு அவை நம்மை ஊக்கப்படுத்துகிறது.

**"பேருவகையும் மகிழ்வும்"** எனும் தலைப்பில் 09-04-2018 அன்று வெளியிடப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது மடலிலிருந்து மேற்கோள்களையும், சொல்ல வேண்டிய செபங்களையும், செய்ய வேண்டிய செயல்களையும் **"மனிதமும் புனிதமும்"** எனும் நூலில் எளிய தமிழில் எழுதியுள்ளார் அருட்பணி. ஜெரி அவர்கள்.

2018 திருவருகைக்காலம் டிசம்பர் 02 முதல் 2019 திருக்காட்சி விழா ஜனவரி 06 வரை அன்றாட சிந்தனைகளும், செபங்களும். செயல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இவற்றை அன்பியங்களில், குடும்பத்தில், தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு நாளும் பயன்படுத்தி புனிதத்தில் வளர்ந்து மகிழ வேண்டுமென்பதே இந்நூலின் நோக்கம். அனைவருக்கும் வாழ்த்துக்கள் .

*அருட்பணி **E.** அருளப்பா*

# கிறிஸ்துமஸ் வந்த கதை ...!

முதல் நூற்றாண்டிலிருந்தே, கிறிஸ்துமஸ் மற்றும் திருவகைக்காலம் கடைபிடிக்கப்பட்டனவா..?

❍ அதுதான் இல்லை ! ஆண்டு 336-இல் தான், உரோமை காலண்டரிலே "கிறிஸ்துமஸ்" என்பதே முதன்முதலில் தரப்பட்டுள்ளது. அதாவது

❍ இந்த நூற்றாண்டில், கிறித்தவ மதம் உரோமை அரசின் மதமாக மாற்றப்பட்டதன் விளைவாக, உரோமை மேலும் புற இனத்தாரின் பாரம்பரிய விழாக்கள், கிறித்தவ திருவிழாக்களாக புதிய வார்ப்புப் பெற ஆரம்பித்தன.

❍ அத்தகைய நடைமுறைகளில் ஒன்றாக, கிறிஸ்துமஸ் விழாவும் உதயங்கண்டது, 336இல் அவ்விழாவிற்கான தயாரிப்பாக "திருவருகைக்காலம்" என்றும் வழக்கமும் வந்தது. எப்போது?

❍ 490-இல் தான்! பிறகு, திருத்தந்தை பெரிய கிரகோரியார் அவர்களால் தான் 'திருவருகைக்காலம்' என்று நான்கு வாரங்களாக வரையறுக்கப்பட்டது.

❍ திருவருகைக்காலத்தின் நான்கு வாரங்களும் கொண்டுள்ள செம்பொருள்கள்: **நம்பிக்கை, அமைதி, மகிழ்வு, அன்பு.**

❍ இவைகளை மனதில் கொண்டே, திருவருகைக்காலத்தின் **முதல் ஞாயிறன்று** ஏற்றப்படும் முதல் மெழுகுவர்த்தி, சிமியோனைப் போன்று (லூக்கா 2:25-40) இறை மக்களாகிய நாமனைவரும் மேற்கொள்ள வேண்டிய எதிர்பார்ப்பினை எடுத்துச் சொல்லுகிறது.

❍ **இரண்டாம் ஞாயிறன்று** ஏற்றப்படும் இரண்டாம் மெழுகுவர்த்தி, எசாயாவைப்போன்று (எசாயா 2:1-5) நாமனைவரும் இறைவாக்கினர்களாக சரித்திரத்திற்கும் சமுதாயத்திற்கும் சரியான சவால்களைத் தந்து, அநீதிகளைத் தகர்த்தெரிந்து, நியாயங்களுக்கான

காயங்களை மேற்கொள்ள வேண்டிய எதிர்பார்ப்பினை எடுத்துச் சொல்லுகிறது.

❍ **மூன்றாம் ஞாயிறன்று** ஏற்றப்படும் மூன்றாம் மெழுகுவர்த்தி, திருமுழுக்கு யோவானைப் போன்று (மத்தேயு 3:1-12) நாமனைவரும் வரலாற்று மாற்றங்களையும், மனித வர்க்கத்திலுள்ள ஒவ்வொருவரும் அரவணைக்க வேண்டிய முன்னேற்றங்களையும் யதார்த்தப்படுத்த வேண்டிய எதிர்பார்ப்பை எடுத்துச்சொல்கிறது.

❍ **நான்காம் ஞாயிறன்று** ஏற்றப்படும் நான்காம் மெழுகுவர்த்தி, மரியாவைப் போன்று (லூக்கா 1:26-38) நாமனைவரும் இறையாட்சியின் நிறைசாட்சிகளாக "**வருகின்றேன், வாழ்வேன், வளருவேன்**" என்னும் உறுதிமொழியினைத் தந்து, அதன் நிமித்தம் மேற்கொள்ள வேண்டிய நெடிய பயணத்திற்கான எதிர்பார்ப்பினை எடுத்துச் சொல்கிறது.

❍ இவ்வாறாக, திருவருகைக்காலமென்பது, நாம் நமக்கே தந்துகொள்ளும் உசுப்புதலாக இருக்க வேண்டும். நம்மில் உறைந்து நிற்கும் இறைமையைத் தட்டியெழுப்புவதாக இருக்கவேண்டும்.

❍ நாமே இயேசுக்களாகப் பிறப்பெடுக்க நமது உள்ளுணர்வுகளை ஊட்டி வளர்ப்பதாக இருக்க வேண்டும்.

❍ இதன்படி, "இயேசு பிறந்தார்" என்பதனைவிட, "இயேசு எதற்காக பிறந்தார்"... என்பதே அதிமுக்கியமாகிறது. "கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைவிட", "கிறிஸ்துமஸ் விசுவாசங்களே முதன்மையாகிறது".

❍ "உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன். இதற்காகவே உலகிற்கு வந்தேன்" (லூக்கா 18:37) என்று இயேசுவே அறிவிக்கின்றார்.

❍ **உண்மைக்கும், நேர்மைக்கும், நன்மைக்கும் நாமும் சான்று பகர்ந்து வாழும்போது, அன்றாடமும் "கிறிஸ்துமஸ்.."! அத்தகைய முறையில் நம் அனைவருக்கும் புத்தாண்டு 2019 அமையட்டும் ...!**

**நல் வாழ்த்துகள் ...! இறை ஆசீர்வாதங்கள்...!**

# திருவருகைக்கான புனிதம்

## பிரான்சிஸின் சிந்தனை :

நம்மிடமிருந்து அனைத்தையுமே நம் இறைவன் எதிர்பார்கின்றார்...!
ஒன்றுமில்லாமைக்கு அல்ல...!
நமக்கு அவர் பின்வருபவற்றையெல்லாம் பிரதியாக தருவதற்குக் காத்திருக்கின்றார்:

அளவில்லா அன்பு...!
ஆழமான மகிழ்வு...!
இலட்சிய நிறைவு...!

இவைகளின் வழியாக நாம் படைக்கப்பட்டதன் இலக்கணங்களை நிறைவேற்ற, நம்மை இறைவன் வளர்த்தெடுக்கின்றார், இன்னமும் வார்த்தெடுக்கின்றார்...! தயக்கங் காட்டிய காலங்களையும், கடந்து, வாழ்ந்திட நம்மை அழைக்கின்றார், நம் அன்பின் இறைவன்!

## நமது செபம் :

தாயும் தந்தையுமாகிய இறைவா!
உமது சாட்சியாக இத்திருவருகைக் காலத்தில் நாங்கள் வளர்ந்திட எமக்குத் தேவையான வரங்களை நிறைந்து தாரும் – ஆமென்.

## எனது செயல் :

இயேசுவின் பிறப்புக்கான திருவருகைக் காலத்தில் எனது பிறப்புக்கான காரணத்தை மென்மேலும் தெரிந்திடவும் தெளிந்திடவும் முயற்சி மேற்கொள்வேன்.

## இன்றைய நற்செய்தி :

லூக்கா 21:25-28, 34-36.

# மற்றவர் மகிழ்வில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

புனிதர்கள்... என்பவர்கள் திருச்சபையால் புனிதப்பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்ல...! தூய ஆவியானவர் ஒவ்வொருவரிலும் செயல்பட்டு ஒவ்வொருவரையும் புனிதப்படுத்துகின்றார்.

நமது குழந்தைகளிடம் தியாக அன்பு கொண்டுள்ள பெற்றோர்களும் புனிதர்களே...!

மற்றவர்கள் மகிழ்வுடன் வாழ, தங்களையே மறப்பவர்களும் புனிதர்களே...!

வயது முதிந்தாலும், வாயார சிரித்து மற்றவர்களை உற்சாகப்படும் மாண்புகொண்டோரும் புனிதர்களே...!

அருகே இருக்கும் ஒவ்வொருவரும் புனிதரே!

அடுத்தவர் ஒவ்வொருவரும் புனிதரே!

**நமது செபம் :**

தாயும், தந்தையுமாகிய இறைவா!

இன்றைய புனிதர் பிரான்சிஸ் சவேரியாரைப்போல இறையாட்சிக்காக் எப்போதும் துடிப்புடன் செயல்படும் பண்பினை எமக்குத் தாரும், அடுத்தவரும் புனிதர் என நிறைவான அணுகுமுறையை நாங்கள் கடைப்பிடிக்க வழிகாட்டும்! - ஆமென்.

**எனது செயல் :**

இதுவரை ஏனோ தானோ.. என அடுத்தவரைப் பார்ப்பதை விட்டுவிடுவேன். அவர்களில் நல்லதைக் கண்டுப் பாராட்டுவேன்.

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 10:1-16.

# பரந்த பார்வையில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

திருச்சபையில் மட்டுமல்ல,
புனிதம் என்பது பரந்த சமுதாயத்திலும் இருக்கிறது.
அதாவது, மனிதம் இருக்குமிடத்திலெல்லாம்
புனிதம் இருக்க வாய்ப்புண்டு.
இப்புனிதம் அனைவருக்கும் ஒரே மாதிரியானது அல்ல. ஒவ்வொருவரும் தத்தம் வாழ்வுச் சூழலுக்கேற்ப
புனிதத்திற்கான வழிவகைகளைக் கண்டறிந்திட வேண்டும்.
அதன்படி கடமையாற்றிடல் வேண்டும்.
காரியம் செய்திடல் வேண்டும்.
கட்டுப்பாடுடன் பயணித்திடல் வேண்டும்.
அப்போது கடவுளே நம்மில் குடிகொண்டுள்ளார்.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா!
எம்மையே சுருக்கிக் கொண்ட தருணங்களை இதுமுதல் விட்டுவிடவும், இயேசுவை மென்மேலும் எங்களின் அன்றாட வாழ்வில் பாவிக்க எங்களை உசுப்பி விடும் – ஆமென்.

**எனது செயல் :**

மனிதம் கொண்ட புனிதத்தை நான் வாழ,
நான் பெற்றிருக்கும் பண்புகளைப் பட்டியல் செயவேன்.

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 10:21-24.

# பொதுநலன் பேணுவதில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

புனிதத்தில் வளர, ஒருவர் ஆயராகவே, குருவாகவோ, துறவியாகவே இருக்க வேண்டிய தேவையில்லை,

அனைவரும் – அதாவது, பொது நிலையினரும் தமக்குரிய மானிட வாழ்வினை மாண்புடன் வாழ்ந்திடும் போது

புனிதத்தில் வளர்கின்றனர்.

திருமணமானவர்களா…? திருச்சபையை இயேசு அன்பு செய்வது போல, துணைவியை/துணைவரை அன்பு செய்திடு…! பெற்றோர்களா…? பொறுமையுடன் குழந்தைகளைப் பேணி வளர்த்து, வல்லமையைக் கூட்டிடு…!

பொறுப்பில் உள்ளோரா? தன்னலம் கருதாது, பொது நலனுக்காக கீழிறங்கி பணியாற்றிடு…!

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா!

அன்றாட வாழ்வில் அனைவருமே புனிதராக வாழ்ந்திட முடியும் என்னும் உம் சவாலுக்காகவே நாங்கள் பெரிதும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். அதன்படி வாழ உம் வரங்களை இன்று, மேலும் என்றும் தாரும் – ஆமென்.

**எனது செயல் :**

சிறுசிறு காரியங்களையும், இனி மேற்கொண்டு நான் பெரு மனதுடன் செய்வேன்.

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 15:29-37.

# இறையாட்சிக்கான புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

உயிர்த்த இயேசுவின் உன்னதமான ஆவியானவர்
நம்மில் என்றும் வாசங்கொண்டுள்ளார்.
அவரின் ஆற்றல்கள் பலனாக நம்மால் இறைவனைப்போலவே அன்பு கொள்ள இயலும்.
குறையுள்ளவர்கள், நாம் அனைவரும்...!
குற்றமுள்ளவர்கள், நாம் அனைவரும்...!
எனினும் இறைவனே நம்மில் வாழ்ந்திடும்போது,
நாமும் இறைவனில் வாழ்ந்திட இயலும்.
ஒவ்வொரு புனிதரும் இறையாட்சியின் சாட்சியத்தில்
ஒரு தனிப்பட்ட அம்சமாவது வாழ்ந்திட வேண்டும்!
அது தியாக அன்பாக இருக்கலாம்,
அது நீதியின்பால் உள்ள தாகமாக இருக்கலாம்.

**நமது செபம் :**

தாயும், தந்தையுமாகிய இறைவா!
எங்கள் தவறுகளைக் கடந்து பார்த்து, உம் இறையாட்சியாகவே எங்களை வார்த்தெடுக்க ஆற்றல்களை வழங்கிடும் - ஆமென்.

**எனது செயல் :**

என்னிடம் உள்ள சிறப்பு அம்சமென்ன? ... எனக் கேட்டறிந்து, அதனை இறையாட்சிக்கானதாக எப்படியெல்லாம் உயர்த்திட வேண்டும் என தீர்மானிப்பேன்.

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 7:21, 24-27.

# இயேசுவாக வாழ்வதில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

இம்மண்ணில் இயேசு வாழ்ந்து,
நிறைவு செய்த அவரின் மனித அனுபவங்களையும்,
புனித அனுபவங்களையும்
நம் வாழ்வில் பிரதிபலிக்க
நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.
இயேசுவின் மறைந்த வாழ்வுகூட
நமக்கு ஒரு பாடம் கற்பிக்கின்றது,
அதாவது, எப்போதும் நம் வாழ்வானது
பௌர்ணமியாக இருக்கப் போவதில்லை,
அமாவாசையும் உண்டு,
அங்கும் நம் வாழ்வு வீரியமுள்ளதாக அமைகின்ற சமயத்தில், இயேசு நம்மிலும், நாம் இயேசுவிலுமாக வாழ்கின்றோம்.

**நமது செபம் :**

தாயும், தந்தையுமாகிய இறைவா,
இயேசுவின் வாழ்வின் இலட்சியத்தையும் இலக்கணத்தையும் நாங்களும் எமதாக்கிக் கொள்ள வழிகாட்டும்,
மேலும், எங்களை வழிநடத்தும் - ஆமென்.

**எனது செயல் :**

நானும் ஒரு மறு இயேசு என்பதை இது முதல் மறக்கமாட்டேன், மறைக்க மாட்டேன்

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 9:27-31.

# அன்னை மரி வழி புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

பெண்மையின் ஞானம் தனிச்சிறப்புடையது...!
இம்மண்ணில், இறைமையின் முழுமையும், புனிதமும்
ஒருவகையில் பெண்களிலே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
எப்போதெல்லாம் பெண்களை
வரலாறு புறக்கணிக்க முயலுகின்றதோ,
அப்போதெல்லாம் தூய ஆவியானரின்
தூண்டுதலாலும், சீண்டுதலாலும்
பெண்கள் மத்தியிலே புனிதர்கள் எழுச்சி பெற்று,
வரலாற்றில் முத்திரை பதித்துள்ளார்கள்.
தங்களின் மறைந்த வாழ்விலும் கூட
குடும்பங்களையும், சமூகங்களையும்
தட்டியெழுப்பும் பெண்களை
உயர் மனிதராக வாழ்த்திடுவோம், வணங்கிடுவோம்...!

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
அன்னை மரியாளின் அமல உற்பவத்தை இன்று கொண்டாடும் நாங்களும் தூய்மையிலும் வாய்மையிலும் வளர்ந்திட, உம் தூய ஆவியின் அர்ச்சிப்பைத் தாரும் – ஆமன்.

**எனது செயல் :**

பெண்களைத் தாழ்வாக நினைப்பதை நிறுத்திக் கொள்வேன்.

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 1:26-38.

# நல் மனம் ஆற்றும் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

இறைத்தந்தையின் இறைத்திட்டத்தின் ஊற்றும், உச்சமும் இயேசு!
அந்த இயேசுவின் மனமும், மாண்பும்
நமதாக வேண்டும்!
அந்த இயேசுவின் மனிதமும், புனிதமும்
நமதாக வேண்டும்!
அந்த இயேசுவின் அருளும் ஆனந்தமும்
நமதாக வேண்டும்!
அந்த இயேசுவின் அன்பும், பண்பும்
நமதாக வேண்டும்!
அந்த இயேசுவின் ஆவியும், ஆற்றலும்
நமதாக வேண்டும்!
அந்த இயேசுவின் வாழ்வும், வழியும்
நமதாக வேண்டும்!

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
இயேசு கொண்டிருந்த மன நிலையினை எம் ஒவ்வொருவருக்கும் வழங்கும். அவர் எம்மில் குடியிருக்கச் செய்யும் – ஆமென்.

**எனது செயல் :**

என் இடத்தில் இயேசு இருந்தால் என்னென்ன செய்திடுவார்... என சிந்தித்துச் செயல்படுவேன்

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 3:1-6.

# தவறுகளைச் சரிசெய்வதில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

எந்த புனிதரும் முழுமையாக
நற்செய்தியை வாழ்ந்ததாக இல்லை...!
ஒவ்வொரு புனிதரும் ஏதாவது ஒரு விதத்தில்
நற்செய்தியிலிருந்து அவ்வப்போது
நழுவி சென்றிருக்கின்றார். - எனினும்
அவர்களின் ஒட்டுமொத்தமான வாழ்வினைக்
கணக்கில் எடுத்துக்கொண்டு,
அவர்களைப் புனிதர்களாக போற்றுகின்றோம்,
அப்படியானால் நமது வாழ்வில் தவறுகள் நிகழும்.
அத்தவறுகளைச் சரி செய்வதில் தான்
அமைகிறது ஓர் ஆழ்ந்த புனிதம்!
அவ்வாறாக, சரி செய்ய இறைவன் தரும் ஆவியின் ஆற்றல்களை பெற்றுக்கொள்ள நமது இதயக் கதவுகளைத் திறந்து வைப்போம்.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
மானிட உரிமைகள் தினமாகிய இன்று தவறுகளைச் சரிசெய்யும் கடமைக்கான வரங்களை இன்றும் என்றும் தாரும் - ஆமென்.

**எனது செயல் :**

மற்றவர்கள் சுட்டிக்காட்டுவதற்கு முன்னதாகவே,
என் தவறுகளை நானே ஏற்றுக்கொள்வேன்.

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 5:17-26.

# அச்சம் தவிர்ப்பதில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

புனிதத்தைக்கண்டு அஞ்சவேண்டிய தேவையில்லை!
நமது திறமைகளையோ,
நமது உற்சாகத்தையோ,
நமது உயிரோட்டத்தையோ... என
எதனையும் புனிதம் இரத்துச்செய்யப் போவதில்லை! – மாறாக
புனிதம் நம்மை அடிமைச் சக்திகளிலிருந்து
விடுதலை செய்யும்!
நம்மை அநீதியான சூழல்களிலிருந்து
விடுதலை செய்யும்!
இன்னமுமாக, நம்மை மனிதராக்கும்,
நம்மை மாண்புடையோராக மாற்றிடும் – மேலுமாக,
மற்றவர்களையும் மாண்புடையோராக மாற்றுவதற்கு
நமது புனிதம் துணை நிற்கட்டும்.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா!
அச்சம் தவிர்த்து வாழ அருள் தாரும்.
துணிவையும் கனிவையும் நிறைந்து தாரும் – ஆமென்.

**எனது செயல் :**

அச்சமில்லை, அச்சமில்லை...
என்பது என் வாழ்வாகட்டும்.

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 18:12-14.

# ஆச்சரியம் தரும் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

நம்முடைய பாவங்களுக்கும்
இறைவனின் பராமரிப்புக்கும் இடையே
நிகழும் அனுபவமும் புனிதமாகும்!
இறைவனின் பாதுகாப்பும், பராமரிப்பும்
நமது கணிப்புகளுக்கெல்லாம் மிஞ்சியது,
நமது கவனிப்புகளுக்கெல்லாம் விஞ்சியது.
இறைவனின் பாதுகாப்பும், பராமரிப்பும்
என்றென்றும் நம்மை அதிர்ச்சிக்கு உட்படுத்தக் கூடியன.
ஏனெனில், எவ்வகையில், எப்போது,
இறைவன் நம்மை ஆட்கொள்வார் என்பது
நமக்கு தெரியாத ஒன்று.
அவரின் கணக்குப்படி, நம்மை அவர்
ஆட்கொள்ள நம்மையே தருவதில் புனிதமுண்டு.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
எம்மையே தருகின்றோம், ஏற்றிடுவாய்! - ஆமென்.

**எனது செயல் :**

பாவத்தை குறைத்து விடுவேன் என்னும் நிலைப்பாட்டில் வாழ்வேன். இன்னமுமாக, பாவத்தை விட்டுவிடுகின்றேன் என்னும் ஆதங்கமும் வளர்ப்பேன்.

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 11:28-30.

# தொடர் முனைப்பில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

இறையருளானது நம்மை ஊடுருவும்..!
அதற்காக, உடனடியாக அல்ல.
அது போலவே, ஒரே தருணத்தில் அல்ல...!
இறையருளானது நம்மில் தொடந்து செயல்படுவதானது.
இறையருளானது அடிமேல் அடி எடுத்து வைத்து,
நம்மை தொடர்ந்து செம்மைப் படுத்தும்.
இறையருளானது நமது ஒத்துழைப்பைக்
கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்படும்.
இறையருளை வாயார போற்றிவிட்டு,
இறையருளைக் கொண்டு ஆவன ஆற்றிட
நாம் தயக்கம் காட்டும்போது,
இறையருளையே நாம் தடைசெய்வதற்கும்
காரணமாக விடுகின்றோம்... என்பதை மறுத்திடல் கூடாது.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
தாராளமனதுடன் நீவீர் வழங்கும் அருளை நன்றியுணர்வுடன் பெற்றுக்கொள்ளும் இதயங்களை எமக்குத் தாரும் – ஆமென்.

**எனது செயல் :**

இறையருளைக் கொண்டு, இன்னமும், இன்னமுமாய்
நன்மைகள் செய்திடுவேன்.

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 11:11-15.

# நன்றி மறவாதலில் புனிதம்

### பிரான்சிஸின் சிந்தனை :

நமது தனிப்பட்ட வாழ்வு முதற்கொண்டு
அனைத்துமே இறைவனின் கொடை!
அதற்கும் மேலாக,
நம்மை வளர்த்தெடுக்கின்றாரே,
அதுவும் இறைவனின் கொடை!
நம்மை வல்லமைப்படுத்துகின்றாரே,
அதுவும் இறைவனின் கொடை!
நம்மை வழி நடத்துகின்றாரே,
அதுவும் இறைவனின் கொடை!
நம்மை வகைப்படுத்துகின்றாரே,
அதுவும் இறைவனின் கொடை!
நம்மை வார்தெடுக்கின்றாரே,
அதுவும் இறைவனின் கொடை!

### நமது செபம் :

தாயும் தந்தையுமாகிய இறைவா,

உமது அளப்பரிய கொடைகளுக்காக எமது உள்ளார்ந்த நன்றிகளை உமக்குச் சமர்ப்பிக்கின்றோம். அந்நன்றியை செய்நன்றியாக மாற்றிட வரம் தாரும் – ஆமென்.

### எனது செயல் :

மனமுவந்து மற்றவர்களுக்கு நன்றி சொல்லுவேன் – தயக்கமின்றி!

### இன்றைய நற்செய்தி :

மத்தேயு 11:16-19.

# இளகியதை இளகிடுவதில் புனிதம்

## பிரான்சிஸின் சிந்தனை :

தூய ஆவியானவரின் தூண்டுதல்கள் இருப்பினும்,
நமது தாயாகிய திருச்சபையை
ஒரு பொருட்காட்சியைப் போல மாற்றிவிட்டோம்.
சில வரையறைகளுக்கும்,
சில வழிமுறைகளுக்கம்,
சில சட்டதிட்டங்களுக்கும்,
சில பாரம்பரியப் போக்குகளுக்கும்,
அளவுக்கு மீறி முக்கியத்துவம் தரும்விடத்து,
திருச்சபையையே சுருக்கி விடுகின்றோம்.
மேலும், நாமும் சுருங்கி போகின்றோம்,
நற்செய்தியின் நயமும், நலமும், நலனும்
குறைக்கப்பட நாமே காரணமாகி விடுகின்றோம், காலப்போக்கில்!

## நமது செபம் :

தாயும் தந்தையுமாகிய இறைவா,
எமது குடும்பமும், அன்பியமும்
இளகிவரும் இதமான காலத்தையும், கடமையையும்
ஏற்று வாழ்ந்திடும் வரம் தாரும் - ஆமென்.

## எனது செயல் :

தேவையில்லாத பாரம்பரியத்திற்குத்
துணை போவதை நிறுத்திக் கொள்வேன்

## இன்றைய நற்செய்தி :

மத்தேயு 17:9-13.

# எளிய வாழ்வில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

செல்வம் தன் வழியாக நமக்கு
நிறைவு தருவதில்லை.
செல்வத்தை மட்டுமே மய்யமாகக்கொண்டு வாழும் போது,
சுயநலமே தலை தூக்கும்,
இறைவார்த்தைக்கு இடமில்லை.
நமக்கு சகோதர சகோதரிகள் மட்டில்
இருக்க வேண்டிய பாசமும் நேசமும்
இடம் பெயர்ந்து போகும்.
ஏழையர்களே பேறுபெற்றோர்... என்பது
இயேசுவின் இறைவாக்கு (லூக் 6:20).
எளிமையில் வாழும் போது
இறைவனே நம்மருகில் இருக்கின்றார்.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
காசேதான் கடவுளப்பா... என்னும்
நாசமான போக்குகளிலிருந்து எம்மை காப்பாற்றும். - ஆமென்.

**எனது செயல் :**

ஏழையரின் மட்டில் என் இதயத்தில்
தனிப்பட்ட ஓர் ஈரக் கசிவை வளர்ப்பேன்.

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 3:10-18.

# இரக்கம் நிறைந்த புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

இரக்கமுள்ளோர் இறைவன் மீது
அளவற்ற நம்பிக்கை கொண்டவர்கள்.
இரக்கக் குணமுடையோரை மற்றவர்கள்
சில தருணங்களில்
துணிவற்றவர்களாக பார்க்க வாய்ப்புண்டு.
எனினும், இரக்கமுடையயோர்
இதயமுடையோராவார்கள்.
ஏனெனில், இரக்கத்தின் வழியாக
இறைப்பிரசன்னத்தைக் கொண்டிருக்கும்போது
இன்னமும் இன்னமுமாக
பல்வேறு காரியங்களைச் சாதிக்கவும் வாய்ப்புண்டு.
பரிவிரக்கத்தினால் நம் வாழ்க்கைப் பாதைக்கு
நல்ல வெளிச்சம் கிடைத்தே தீரும்.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
இரக்கம் நிறை இதயத்திற்கான
பண்பு தாரும், பக்குவம் தாரும் – ஆமென்

**எனது செயல் :**

இரக்கச் செயல் நாளும் ஒன்றாவது செய்வேன்.

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 1:1–17.

# காயங்களைத் தொடுவதில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

கொண்டாட்டங்கள், பொழுதுபோக்கு...
போன்றவைகள்தாம் நம் வாழ்வின் சிறப்பு என
உலகம் சொல்லும் - ஆனால்
மற்றவர்களின் கவலைகளிலும்,
துயரங்களிலும் பங்கெடுப்பவர்களே
வாழ்வின் சிறப்புகளைச் சுவைப்பவர்கள்!
அத்தகைய சிறப்பு கண்டவர்கள்,
மற்றவர்களின் காயங்களைத் தொடுவதற்கும் முன் வருவார்கள்.
பிறரைக் குறித்த அக்கறை கொள்ளும்போது
இடைவெளிகள் காணாமல் போகும்.
அவர்களின் வருத்தல்களில் பங்கெடுப்பதும்,
அவர்களின் அனுபவங்களுக்குப் பணி செய்வதும்
புனிதத்தின் இமயம்.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
அழுவாரோடு அழும் அரிய பண்பை
எம் அனைவருக்கும் தாரும். - ஆமென்.

**எனது செயல் :**

இன்ப காலங்களில் பங்கெடுக்கின்றேனே,
ஏன் துன்ப காலங்களில் ஒதுங்கி விடுகின்றேன்... என
சுய விமர்சனம் செய்வேன்.

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 1:18-24.

# நீதியை நிலைநாட்டுவதில் புனிதம்

## பிரான்சிஸின் சிந்தனை :

"நீதியின்பால் பசிதாகமுடையோர் பேறுபெற்றோர்".
பசியும் தாகமும் ஒவ்வொரு மனிதரின்
அடிப்படை தேவைகளாகும், அதுபோலவே,
நீதியும் நேர்மையும் மானிட வரலாற்றின்
அடிப்படை அம்சங்களாகும்!
காலம் தாழ்த்திக்கூட,
உண்மையும் உன்னதமும் உயிர்ப்புப்பெறும்...
என்பது இயேசுவின்
உறுதிமொழியும் உத்திரவாதமுமாகும்!
நீதியின் நிறைவைச் சந்திக்க
வாய்ப்பு கிடைக்காது போனாலும் கூட,
நீதியை நிலைநாட்ட உழைப்பது
நம் கடமையாகும் - மேலும் பெருமையாகும்

## நமது செபம் :

தாயும் தந்தையுமாகிய இறைவா,
உண்மையைத் தேடி அலையும் போது,
உம்மையே தேடி அலைகின்றோம்...
என்ற உயர்ந்த சிந்தனை எமதாகட்டும். - ஆமென்

## எனது செயல் :

நீதிக்குத் தலை வணங்குவேன்.

## இன்றைய நற்செய்தி :

லூக்கா 1:5-25.

# மன்னிப்பதில் மலரும் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

தருவதில் உள்ள இன்பம்,
பெறுவதில் இல்லை என்பார்கள்
அதுபோலவே,
மன்னிப்பதில் உள்ள இன்பம் மட்டற்றது.
ஏனெனில் மன்னிப்பது என்பது இறைப் பண்பாகும்.
நமது அனைத்துப் பாவங்களையும்
இறைவன் மன்னிக்கும்போது,
நாம் மற்றவர்களை மன்னிப்பது என்பது
இறை மன்னிப்பில் ஒரு சிறிய பகுதியே!
மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும்
என எதிர்பார்க்கின்றாயோ,
அவைகளை நீ மற்றவர்களுக்கு செய்திடு...
என்பது நம் வாழ்வாகட்டும் (மத் 7:12).

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
மறக்க இயலாவிட்டாலும் மன்னிக்கவாவது
முன்வரும் சிந்தையை எமக்குத் தாரும். - ஆமென்.

**எனது செயல் :**

நான் மன்னிக்காவிட்டால், இறைவனாகிய நீரும் என்னை மன்னிக்கமாட்டீர் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 1:26-38.

# இதய வாஞ்சையில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

நமது நிஜமான எண்ணங்களையும்,
நமது நயமான எதிர்பார்ப்புகளையும்
நமது நேர்மையான ஏக்கங்களையும்...
ஒருசேர 'இதயம்' என்று
அடையாளப்படுத்தி அமைகின்றது விவிலியம்.
இதயமுடையோர் இறைவனையே
எங்கும் எவரிலும் எப்போதும் காண்பர்.
வெறுமனே வார்த்தைகளில் மட்டுமல்லாது,
வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும்
இறைவன் சார்பாக இருந்து
அவர்கள் மற்றவர்களுக்குப் பணிவிடை புரிவார்கள்.
அவ்வழியாக, அவர்கள் மானிடர் மத்தியில்
இறைவனையே பிரசன்னப்படுத்துகிறார்கள்.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
எங்களின் மூகமூடிகளைக் கிழித்தெறிந்துவிட்டு,
உம்மை மற்றவர்களில் சந்திக்கும்
வரமும் வாய்ப்பும் வாழ்வும் தாரும் - ஆமென்

**எனது செயல் :**

ஏழையரின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன்.

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 1:39-45.

# புறணியைத் தவிர்ப்பதில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

புரணிப் பேசுவதும், புரணிப் பரப்புவதம்,
அமைதியையே கொலை செய்யும்.
மற்றவர்களின் நற்பெயர்களைக் கொலை செய்யும்.
மற்றவர்களின் நற்காரியங்களைக் கொலை செய்யும்.
அவ்வாறாக, புரணிப் பேசுவதன் வழியாக
நாம் திருப்தி காண முயல்வோம்.
அப்போது, நாம் அமைதியின் துரோகியாகின்றோம்.
நாம் "பேறுபெற்றோர்" தகுதியை இழக்கின்றோம்.
மேலும் மனிதத்தை மிதிக்கின்றோம்,
புனிதத்தை புதைக்கின்றோம்.
நாமும் நிறையுணர்வுடன் வாழாமல்,
மற்றவர்களையும் நிறையுணர்வுடன்
வாழவிடாது தடுக்கின்றோம்

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
பொய்யும், புரட்டும், புரணியும்
அறவே விட்டுவிடும் புனிதம் தாரும் - ஆமென்

**எனது செயல் :**

என் நண்பர்கள் புரணிப்பேசும் போது,
அதனைத் தடைசெய்ய முயற்சி மேற்கொள்வேன்.

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 1:46-56.

# எதிர்ப்பதிலும் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

இலகுவான வாழ்க்கையைத் தேடுவது
இயேசுவின் சீடர்களுக்கு ஒவ்வாதது - மாறாக
எதிர்நீச்சல் போட்டு ஏற்றமிகு புதியதோர் சமுதாயத்தைச்
சமைத்தெடுக்க நாம் முன்வர வேண்டுமென்பதே
இயேசுவின் எதிர்பார்ப்பாகும்.
அரசியல், மக்கள் தொடர்பு, பண்பாடு, பொருளாதாரம்... போன்ற
பல்வேறு துறைகளிலும்
மானிட உரிமைகளுக்கு எதிராக
முனைப்புகள் மேற்கொள்ளப்படும் போது,
இறையாட்சியினராக
அத்தகைய உரிமை மறுப்புகளை எதிர்க்க வேண்டிய
சவால் நமக்கு உண்டு - அதிலும்,
பாவப்பட்டவர்கள், பரிதாபத்திற்குரியவர்கள், பாமரர்கள்...
போன்றோரின் உரிமை மீறல்களை முறியடிக்கவேண்டிய
சவால் நமக்கு உண்டு.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
அக்கிரமங்களுக்கும், அழுக்குகளுக்கும் எதிராக
நீச்சல்போடும் பண்பு எமதாகட்டும். - ஆமென்

**எனது செயல் :**

அட்டூழியத்தை எதிர்ப்பேன், உடனடி வெற்றி வராவிட்டாலும்!

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 1:39-45.

# குறைகளைக் களைவதில் புனிதம்

## பிரான்சிஸின் சிந்தனை :

கருத்தியல்களோ, சித்தாந்தங்களோ
நம்மில் இரு குறைகளை உருவாக்க வாய்ப்புகளுண்டு.
நற்செய்தியின் விழுமியங்களாகியசு
மத்துவம், சுதந்திரம், சகோதரத்துவத்தை
ஏற்றுக்கொள்ளும் போதே,
நற்செய்தியைப் பறைசாற்றி, வாழ்ந்து காட்டிய
இயேசுவைத் தவிர்ப்பது
முதல் குறை...!
நற்செய்தியின் விழுமியங்களாக செயல் புரிவதை
வெறுமனே சமூகப்பணிகளாக மட்டுமே பார்ப்பது,
இரண்டாம் குறை...!
இந்த இரண்டு குறைகளையும் களையவேண்டிய
கட்டாயமும், கடமையும் நமக்கு உண்டு

## நமது செபம் :

தாயும் தந்தையுமாகிய இறைவா,
குறைகளைக் கடந்து,
நிறையை நோக்கிப் பயணிக்கும் பக்குவம் தாரும் – ஆமென்

## எனது செயல் :

சித்தாந்தச் சிறைகளிலிருந்து
என்னை விடுவித்துக் கொள்வேன்.

## இன்றைய நற்செய்தி :

மத்தேயு 1:67-79.

# கிறிஸ்துமஸ் நல்கும் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

கருவறையில் வளரும் மழலையிடமும்
வேண்டும் ஒரு தனிப்பட்ட மரியாதை!
அம்மழலைப் பிறக்கவில்லை வெளியே! – எனினும்
உயிருடன் வளர்கிறது உள்ளே!
அதற்கான மாண்பு வழங்கிடல் வேண்டும்.
அதன் மீது நம் அன்பு வளர்ந்திடல் வேண்டும்.
கருச்சிதைவு... என்பது
ஒரு கொடுமையான பாவம் என்பதனை
நாம் அறிந்திடல் வேண்டும்!
இறைத்திட்டத்திலே உருவாக்கப்பட்டு வளரும்
சிசுவிடமும் உள்ளது இறைச்சாயல் (முதல் நூல் 1:26-27).

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
உம் திருமகன் இயேசு இந்த மண்ணில் பிறந்த பெருவிழாவினைக் கொண்டாடுகின்றோம். "இம்மானுவேல்" என நீரே அவரில் என்றும் எங்களோடு... என்பதன் தொடர்ச்சியாக, நாங்களும் உம்முன் இருப்போமாக – ஆமென்

**எனது செயல் :**

புன்சிரிப்புடன், தெரியாதவர்களிடம் கூட
கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைக் தெரிவிப்பேன்.

**இன்றைய நற்செய்தி :**

யோவான் 1:1-18.

# சான்று வாழ்வில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

நவீன உலகில் மென்மேறுமாக
புதிய புதிய அடிமைத்தனங்கள்
தலை தூக்குகின்றன...! அதன்தொடர்பாக,
'தூக்கியெறியும்' கலாச்சாரப் பழக்கம்
நம்மில் வளருகின்றது.
ஒரு காலத்தில், பயன்படுத்திய
கரண்டிகளை, கோப்பைகளைத் தூக்கியெறிந்தோம். ஆனால்...
இப்போது தாய் தந்தையர்களையே தூக்கியெறிகின்றோம்.
பண்பாட்டுச் சிறப்பு அம்சங்களையே தூக்கியெறிகின்றோம்.
வயது முதிர்ந்தோரையே தூக்கியெறிகின்றோம்.
ஒரு தேசத்து மக்களையே தூக்கியெறிகின்றோம்!

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
நற்செய்தியின் முதல் சாட்சியாக உயிர்துறந்து
புனித ஸ்தேவானுக்கு வீரவணக்கம் செலுத்தும் இந்நாளில், நாங்களும் இறைச் சான்று வாழ்வில் வளர்ந்திட வரம் தாரும் - ஆமென்

**எனது செயல் :**

பொருட்களைக்கூட தூக்கியெறியாது, மீண்டும் பயன்படுத்துவேன். எக்காரணத்தைக் கொண்டும் எத்தருணத்திலும் மனிதர்களைத் தூக்கியெறியமாட்டேன்.

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 10:17-22.

# குழந்தைக்கான குணங்களில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

சில செபங்களைச் சொல்லுவதிலும்,
சில பக்தி முயற்சிகளைக் கடைப்பிடிப்பதிலும்,
சில வழிபாடுகளைப் பின்பற்றுவதிலும்
நமது அருள்வாழ்வும், ஆன்மீகமும்
முழுமைப் பெற்றதாக நினைப்போம்.
ஆனால் -
செபங்கள் முக்கியமானவைதான் - எனினும்
செயல்களும் முக்கியமானவையே.
"செபிக்கும் கரங்களைவிட
செயல்புரியும் கரங்கள்
சிறப்பானவை". (புனித அன்னை தெரசாள்)

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
குழந்தை இயேசு காப்பாற்றப்பட வேண்டி, கொலை செய்யப்பட்ட மாசற்ற குழந்தைகளுக்கு இன்று அஞ்சலி செலுத்துகின்றோம். குழந்தைக்கான குணங்களை எம்மில் உசுப்பிவிடும் - ஆமென்.

**எனது செயல் :**

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று...
என்பதை ஏற்றுக்கொள்வேன்.
குழந்தைகளின் உரிமைகளைப் போற்றி வளர்ப்பேன்.

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 2:13-18.

# காலக் கவனிப்பில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

நம்மைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தால்
மற்றவர்களைக் குறித்த கரிசனைக்கு
நேரமில்லாது போகும்...!
பலவற்றைப் பற்றியே அக்கறைக்கொண்டிருந்தால்
முதன்மையானவற்றைக் குறித்த
பார்வைக்கு நேரமில்லாது போகும்...!
வசதிகள்... சொகுசுகள்... எனக் கவலை கொண்டால்
தேவைகள்... சேவைகள்... என்பவற்றைக்குறித்து
நேரமில்லாது போகும்.
காலத்தின் கவனத்திலும், கடமையிலும்
கடவுளே வெளிப்பட காத்திருக்கின்றார்.
இறையாட்சிக்கான நீதி, சுதந்திரம், அன்புப் பணிகளுக்கு
காலத்தை ஒதுக்குவோம்,
கடமையை ஆற்றுவோம்.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
திசை தவறிய தருணங்களுக்காக
மன்னிப்பு கேட்கின்றோம் – ஆமென்.

**எனது செயல் :**

'நேரம் பொன்னானது'... என வாழ்வேன்

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 2:22-35.

# குடும்ப மாண்பில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

மற்றவர்களைப் பற்றி குறைசொல்வது
புனிதர்களிடத்தில் இல்லை...!
நம்முடன் வாழும் சகோதர சகோதரிகளிடமும்
இருக்கின்றன குறைகள்!
எனினும் - அவர்கள் ஏதோ ஒரு விதத்தில்
நம்மிலும் சிறப்பானவர்கள் என்று
எண்ணங்கொண்டு
உறவும் உரையாடலும் கொள்ளும்போதுதான்
புனிதம் பூக்கின்றது - அப்போது
குறைகளை நிறைகளால் மாற்றிடும்
மனிதமும் மலருகின்றது.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
திருக்குடும்பப் பெருவிழாவான இன்று,
எங்கள் குடும்பத்திற்கான விவேகம், உறவு, சுகம், பக்தி, அழகு, வாழ்நாள், விழிப்புணர்வு, வசதி, கல்வி, சுற்றம், ஒழுக்கம், உணவு, நட்பு, வீரம், மகிழ்வு, மகவு என்று தமிழ் கூறும் நல்லுலகு போற்றும் 16 பேறுகளும் தாரும் - ஆமென்

**எனது செயல் :**

என் குடும்பத்தை ஒரு பல்கலைக்கழகமாக்குவேன்.

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 2:41-52.

# நன்னம்பிக்கை நல்கும் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

இறைவனே நம்முடன் இருக்கும்போது,
நமக்கு எதிராக யார்...? (உரோ 8:31)
என்னும் நம்பிக்கையே
புனிதர்களின் நெஞ்சங்களில்
ஆணிவேராக இருந்து உயிரூட்டுகிறது!
அதன்வழி, புனிதர்களும்
மற்றவர்கள் இருளில் இருக்கையில்,
மற்றவர்கள் நெருக்கடியில் இருக்கையில்,
மற்றவர்கள் நெருடலில் இருக்கையில்,
மற்றவர்கள் நெருப்பில் இருக்கையில்,
துணைநிற்பார்கள்! - தோழமை தந்து
தூக்கி விடுவார்கள்!

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
தன்னம்பிக்கை தாரும் - மேலும்.
நன்னம்பிகை தாரும்! - அவைகளை
மற்றவர்களுக்கும் வழங்கும் மனது தாரும் - ஆமென்.

**எனது செயல் :**

துவண்டு வருவோருக்கு ஆதரவு தருவேன்
அதுவும், அவர்கள் கேட்பதற்கு முன்பே...!

**இன்றைய நற்செய்தி :**

யோவான் 1:1-18.

# புத்தாண்டு கொண்டுவரும் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

மகிழ்ச்சியின் உச்சமாக இருப்பதே புனிதம்.
இகழ்ச்சிகளும், வருத்தங்களும் இல்லாது
இருக்கப் போவதில்லை - எனினும்
புன்னகையும், முகமலர்ச்சியும்
புனிதத்தின் வெளிப்பாடுகள்.
தூய ஆவியானவரின் கொடைகளில்
ஒன்றான மகிழ்ச்சியானது
நம் அன்றாட வாழ்விற்கு
ஒரு இதமான நோக்கையும் போக்கையும் தருகின்றது.
நம் சமூக உறவுக்கு
ஒரு இனிப்பான வரவை வழங்குகிறது.
மகிழ்ச்சி என்பது தாசாரணமான ஒன்றல்ல,
சூழலையே மாற்றிடும் சக்தி வாய்ந்தது.
சுற்றத்தையே அரவணைத்திடும் வல்லமை படைத்தது.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
இடுக்கண் வரினும் நகுக.. என வாழும் வரம் தாரும் - ஆமென்.

**எனது செயல் :**

இலவசமாக வழங்கக்கூடிய புன்னகை தந்திட தயங்க மாட்டேன்! இது என் புத்தாண்டுச் சபதம்!

**இன்றைய நற்செய்தி :**

லூக்கா 2:16-21

# சுதந்திர சுவாசத்தில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

புனிதத்தின் மறுபக்கம்,
ஓர் உள்ளார்ந்த சுதந்திரம்.
உள்ளே அமைதியும் அருளும் இருக்க,
வெளியே ஆனந்தமும் ஆதங்கமும் இருக்கும்! - அப்போது,
ஒரு சுதந்திர வேட்கையுடன் செயல்படக் கூடிய துணிவும்
தானாக வெளிப்படும்.
புனிதத்தின் புதையல் அது.
புனிதத்தின் பொலிவு அது.
திறந்த மனதுள்ளோருக்கு
ஆவியின் அருட்கொடையே அத்தகைய சுதந்திரம்.
"ஆம் என்றால் ஆம்". என்றும், "இல்லை என்றால் இல்லை".
என்றும் சொல்லும் ஆளுமையான சுதந்திரம் அது…!

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
உள்ளார்ந்த சுதந்திரத்தை என்றென்றும் போற்றிட,
ஆற்றிடத் தேவையான துணிவை நிறைந்து
எங்களுக்குத் தாரும் - ஆமென்.

**எனது செயல் :**

பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்.
பரிபுரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம். (பாரதியார்)

**இன்றைய நற்செய்தி :**

யோவான் 1:19-28

# உசுப்புதலில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

நமது உலகையே சிறியதாக்கி
நாம் நம்மையே சுருக்கிக் கொண்டு
இறையருளையே இறுகிட செய்கின்றோம்!
நமது இறைவன்,
எப்போதும் புதுமை தருபவர்,
எப்போதும் புனிதம் தருபவர்,
எப்போதும் புன்னகை தருபவர்,
அப்படியானால்,
நம் இதயக் கதவுகளைத் திறப்போம்.
நம் நெஞ்சத்து சன்னல்களைத் திறப்போம்.
இறைவன் நம்மை உசுப்பி விடட்டும்!
"உறங்கியது போதும்" என்று நாமும் உற்சாகம் பெறுவோம்!
இறைவன் தரும் உள்ளொளியும், உத்வேகமும், உள்ளுணர்வும்
புனிதத்தின் கொடைகள். - இவற்றை ஏற்று வாழ்வோரே
உயிர்த்த இயேசுவின் சாட்சிகள்

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
விரித்துப் பார்க்க, விசாலமாக பயணிக்க எமக்குப் பாதை காட்டும் - ஆமென்.

**எனது செயல் :**

அடக்கி வாசிக்க மறுப்பேன்.

**இன்றைய நற்செய்தி :**

யோவான் 1:29-34

# முற்போக்குகளில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

இதுவரை இப்படித்தான் செய்தோம் என்று
பாரம்பரியத்தையே பற்றிக் கொண்டு
வாழ்வினைத் தொடர்வது
புனிதத்திற்கு ஏற்றதல்ல.
உயிர்த்த இயேசுவின் ஆவியின் உந்துதலால்
தேக்க நிலையிலிருந்து உயிரோட்ட நிலைக்கு
நம்மையும் மற்றவர்களையும்
அழைத்துச் செல்வதென்பது புனிதமாகும்.
பழமை நல்லது தான் - ஆனால்,
புதுமை மிக நல்லது - ஏனெனில்
மாற்றங்களின்றி, முன்னேற்றங்களில்லை.
புதிய முன்னெடுப்புகள் வழியாக, நாம் அனைவரும் இயேசுவின்
புதிய உடன்படிக்கைக்கு உரியவர்களாகிறோம்.

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
புதிய உடன்படிக்கையின் நாயகனாம்,
உம் திருமகன் இயேசுவைப் பின்பற்றும்
பேற்றினை எமக்குத் தாரும் - ஆமென்.

**எனது செயல் :**

முன்னேற்றங்களைப் பிரசவிக்கும் மாற்றங்களைப் போற்றுவேன்.

**இன்றைய நற்செய்தி :**

யோவான் 1:35-42

# சிறுமையிலும் பெருமைமிகு புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

சிறு சிறு காரியங்களில்
கவனங்கொள்வது புனிதம் என்பதை
இயேசுவே தம் சீடர்களுக்கு எடுத்துரைத்திருக்கின்றார்:
இரசம் தீர்ந்து விட்டது...
ஆடு ஒன்று காணவில்லை...
இரு செப்புக்காசு தந்த விதவை...
விளக்குகளில் எண்ணெய் இல்லாமை...
சீடர்களிடம் எத்தனை அப்பங்கள்...
எனப் போன்ற சிறிய விவரங்களிலும் அக்கறை காட்டுவது
நமது ஆன்மீக வாழ்வின் ஆழமாகும், அழுத்தமாகும்...!
சிறிய காரியம் தானே... என்று
ஏனோதானோ என இருக்கும் போது,
பெரிய காரியங்களை நிறைவேற்றும்
பாக்கியத்தையும், பக்குவத்தையும், பண்பையும்,
தவற விட்டுவிடுகின்றோம் என்பதனை மறக்கலாகாது

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
சிறிய செயல்களையும் சீராக செய்திடவும், சிறப்பாக செய்திடவும் சக்திகளைத் தாரும் - ஆமென்.

**எனது செயல் :**

சிறியது தானே என நழுவிட மாட்டேன்.

**இன்றைய நற்செய்தி :**

யோவான் 1:43-51

# ஞானத்தை நாடுவதில் புனிதம்

**பிரான்சிஸின் சிந்தனை :**

நமது புனிதம் பொய்மையாகி விடக்கூடாது – மாறாக,
நமது புனிதம் மெய்மையை நோக்கி
பயணிக்க வேண்டும்.
நமது வாழ்வில் மெய்மையும், தூய்மையும்,
வாய்மையும், நேர்மையும்... வளரவேண்டும்.
இவையாவும் தனி நபர்களில் மட்டுமல்ல,
மானிட வரலாற்றிலேயே நிலைத்து அமைய வேண்டும்.
அதுவே புதிய சமுதாயம்!
அதுவே இறைச் சமுதாயம்!
இறைச்சமுதயம் நம் ஒவ்வொருவரிடமும் உள்ளது,
நம் அருகாமையில் உள்ளவர்களிடமும் உள்ளது.
இணைந்து பயணிப்பதிலே புனிதம் பொலிவு பெறும்..!

**நமது செபம் :**

தாயும் தந்தையுமாகிய இறைவா,
நல்வாழ்வின் வழிமுறைகளைப் பற்றிக்கொள்ள
எம் குடும்பங்களுக்கு நிறைந்த வரங்களைத் தாரும் – ஆமென்.

**எனது செயல் :**

திருக்காட்சியின் போது வந்த ஞானிகள் மூன்று...!
நான்காம் ஞானியாக நான் தடைகளைத் தாண்டி,
இறைவனைத் தொடர்ந்து தேடுவேன்.

**இன்றைய நற்செய்தி :**

மத்தேயு 2:1-12

## இவ்வாண்டு 2018 - திருவருகைக் காலத்தில்

நானும், எனது குடும்பமும் மேற்கொள்ள இருக்கும் சிறப்புத் தயாரிப்புகள் :

## இவ்வாண்டு 2018 - கிறிஸ்துமஸ் அன்று

நானும், எனது குடும்பமும் மேற்கொள்ள விரும்பும் சிறப்பு முன்னெடுப்புகள் :

## வரும் 2019 - புத்தாண்டு முழுவதும்

நானும், எனது குடும்பமும் கடைபிடிக்க இருக்கும் சிறப்பு உறுதிமொழிகள் :